Registered as a News Paper பக்கங்கள் 16 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 கார்த்திகை 04 (19-11-1992) வியாழக்கிழமை ஓசை 275

## பரீட்சை அனுமதி அட்டைகள் குமணவில் எடுத்துவரப்படும்

டிசம்பரில் நடைபெறஇருக்கும் க. பொ. த. (சா/த) பரீட்சையின் யாழ். மாவட்டத்திற்கான பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் மற்றும் காகிதாதிகள் என்பன கப்பல் மூலம் எடுத்து வரப்படுகின்றன இம்மாதம் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் பருத்தித்துறையை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்ற 'குமண' கப்பலிலேயே இவைகள் எடுத்து வரப்படுகின்றன என யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதே வேளை நேற்று முன்தினம் கொழும்பில் வெளியான 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளில் யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் (6ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதப் படைகளை நவீனமயப்படுத்த சிறிலங்கா அரசு தீவிர முயற்சி

## வெளிநாடுகளில் ஆயுதக் கொள்வனவு

[கொழும்பு]

சிறிலங்கா அரசு தனது முப்படைகளையும் நவீனமயப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தி வருவதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது. பல நூறு கோடி ரூபா செலவில் நடைபெறும் இந்த நவீனமயத் திட்டத்திற்கு மேற்கு நாடுகளில் இருந்து புதிய நவீனரக ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்யவுள்ளதாகவும், அதற்கான முன் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த நவீனப்படுத்தும் திட்டத்திற்கென விமானங்கள், உலங்குவானூர்திகள், அதிவேக படகுகள், டாங்கிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்ய அரசு திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலும் இதனால் ஏற்படும் பெரும் எண்ணிக்கையான உயிரிழப்பும், இராணுவத்திலிருந்து பெரும் எண்ணிக்கையானோர் விலகுவதையும் தொடர்ந்தே இராணுவத்தை நவீனப்படுத்துவதன் மூலம் புலிகளுக்கு எதிரான போரைத் தொடர்ந்து நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் முதற்கட்டமாக மேற்கு நாடுகளிடம் இருந்து நவீன தொழில் நுட்பத்துடன கூடிய போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் சிறிலங்கா மும்முரமாக ஈடுபட்டுள்ளது. எண்பதுகளில் சீனா சிறிலங்காவிற்கான பிரதான ஆயுததளபாட விநியோகத்தராக இருப்பினும் அவ் ஆயுதங்களின் தரம் சிறிலங்கா இராணுவத்திடம் நன்மதிப்பைப் பெறவில்லை.

அதனால், பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளிடம் [6 ஆம் பக்கம் பார்க்க]



## கிழக்கில் மீண்டும் நடவடிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் ஓர் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டு இருப்பதாகவும் மேலும் ராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் உள்ள குண்டுஉற்பத்தி தொழிற்சாலையைக் பற்றி இருப்பதாகவும், மேலும் இந்த நடவடிக்கை தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.



கடற்படைத்தளபதி கொல்லப்பட்ட இடத்திற்கு சென்று பார்வையிட்ட சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் பாரியார், முதற் பெண்மணி ஹேமா பிரேமதாசா துக்கம் தாளாது விம்மி அழுவதை படத்தில் காணலாம்.

## பல மைல்கள் பின் தொடர்ந்து நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்

(கொழும்பு)


சிறிலங்கா கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ மீது குண்டுத் தாக்குதலை நடாத்திய மோட்டார் சைக்கிள்நபர் கொழும்பு பௌத்தலோக மாவத்தையிலுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க மகளிர் கல்லூரிக்கு அண்மையில் இருந்து அவரது வாகனத்தைத் தொடர்ந்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; கடற்படைத் தளபதி காலை 8.05 மணியளவில் காரொன்றில் தமது இல்லத்திலிருந்து புறப்பட்டு முன்னும் பின்னும் இரு ஜீ

## கந்துலவை மீட்கச்சென்றபோதே



கொழும்பில் கடந்த திங்களன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகிய சிறிலங்கா கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டே பயணம்செய்த ''மேசிடர்ஸ் பென்ஸ்'' கார் தலைகீழாக புரண்டு கிடப்பதை படத்தில் காணலாம்.



குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறிலங்கா கடற்படை தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோவின் உடல் காருக்கு சற்று வெளியே முகம்குப்புற கிடப்பதை படத்தில் காணலாம்.

# கிளான்சி மீதான குண்டுதாக்கு; விசாரணை உடன் ஆரம்பம்

கடற்படை தளபதி குண்டு தாக்குதலில் கொல்லப்பட்டது தொடர்பாக குற்றவியல் புலன் விசாரணை அதிகாரி தலைமைப் பீட அதிகாரி. இரகசிய பொலிஸ் அதிகாரிகள், தேசிய குற்றவியல் அதிகாரிகள் ஆகியோர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இவர்கள் மோட்டார் சைக்கிள் நபர் தொடர்பாக விசாரணை செய்தனர் இவருக்கு வேறு சிலரது உதவி கிடைத்திருக்க வேண்டும் என்று விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் நபருடன் இன்னும் ஒருவர் வேறொரு மோட்டார் சைக்கிளில் வந்து இடையில் திரும்பிச் சென்றதாகவும் விசாரணைகள் தெரிவிக்கின்றன.

# கடற்படைத் தளபதி பலியானாராம்

கற்பிட்டிக்கடலில் கடந்த மாதம் மூழ்கிய ''கந்துல'' என்ற கப்பலை மீட்பது தொடர்பாக ஆலோசனை மாநாடு நடத்தவே தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ அவசரமாகக் கடற்படை தலைமை அலுவலகத்திற்குச் சென்றுகொண்டிருந்தார் என தெரியவருகிறது அத்துடன் கற்பிட்டி - மன்னார் படகுச் சேவையைப் பார்வையிடக் கற்பிட்டிக்கும் செல்ல இருந்தாராம்.

குண்டுத்தாக்குதலுக்கு முன் தினமிரவு 7 மணிக்கு ஜோன் டி சில்வா மண்டபத்தில் நடைபெற்ற ''கடற் குருவிகள்''

[6 ஆம் பக்கம் பார்க்க]

வண்டிகள் சகிதம் காலி வீதியை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க மகளிர் கல்லூரிக்கு அண்மை

[6 ஆம் பக்கம் பார்க்க]

# தளபதியின் கடைசி ஒப்பம் நவீன விசைபடகு கொள்வனவு

கொழும்பில் கடந்த திங்கள் அன்று இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ இறுதியாக கடற்படைக்கு நவீன அதிவேக கடற்படைப் படகுகளை கொள்வனவு செய்வதற்கான பத்திரத்தில் கையொப்பமிட்டிருந்தார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

குண்டுத் தாக்குதல் நடைபெறுவதற்கு முதல் தினம் கொழும்பு கடற்படை தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இவ் ஒப்பந்தம் 'டொக்யாட்' நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்டது.

இதுவே அவர் கையெழுத்திட்ட இறுதிப் பத்திரம என தெரிவிக்கபபடுகிறது

# கரையோரப்பகுதி மீது கடற்படை தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டின் கரையோரப்பகுதிகள் மீது கடற்படையினரும், இராணுவத்தினரும் பரவலான 50 கலிபர் மற்றும் சிறு பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினர் கரையோரப் பகுதிகள் மீது 50 கலிபர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மேலும் நேற்று முன்தினம் இரவு பலாலி சிறிலங்கா இராணுவத்தினர், முகாமில் இருந்து அச்சுவேலி குடிமனைகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மண்டைதீவு. கல்முனைப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரும் கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்று காலையில் 50 கலிபர் மற்றும் சிறு பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

[பா] (யோ)

# சின்னஞ்சிறு பிஞ்சுகூட எல்லையிலே காவல் நிற்கும்

உணர்வைக்கொண்டு உயிரைக்கொடுத்து ஒரு தற்கொடை வேள்வி இந்த மண்ணில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. அதில் ஆகுதியானவர் மாவீரர். இங்கே சின்னஞ்சிறு பிஞ்சுகூட எல்லையிலே காவல் நிற்கும். சீரழியும் தாய்நிலத்தைச் சீர்படுத்த முனைந்து நிற்கும். பட்டினியாய் கிடந்தாலும் பணியிலே சோர்ந்ததில்லை. பனிமழையில் நனைந்தாலும் பகலிரவு என்று பார்த்ததில்லை. தோள்களிலே சுடுகருவியுடனும் வீழ்வதில்லை என்ற உறுதியுடனும் போராடியவர்கள், போராடி மறைந்து போனவர்கள் மாவீரர் இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல்துறை செயலகம் வெடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணீரில் வாடுகின்றதன் இனத்தை வாழவைக்க தன்னை எண்ணாமல் - தன் சுகம் பேணாமல் மண்ணையே பெரிதென நினைத்து மானமே உயிரென்று - புறப்பட்டுக் களமாடி மடிந்து போனவர் மாவீரர்.

தமிழ், தமிழன் என்பதை உலகிலே துலங்கவைத்தவர் தமிழினம் ஆண்ட கதையினை- அடிமையாய் இருக்கமாட்டாது என்ற உண்மையினை உணரச் செய்தவர். தமிழினி வரலாற்றைப் புதிதாய் எழுத எழுது கோலாய் நின்றவர். புதியதோர் புறமொன்றைப் படைத்தவர். எங்கள் மான

[6 ஆம் பக்கம் பார்க்க]

**எஞ்சியுள்ள பணியனைத்தும் எடுத்தலே மாவீரர் அஞ்சலிகளாகும் அறி**

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பண்டேஜ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. ஆதவன் மருந்தகம், கைதடிச் சந்தி.
(சி-3222)

## மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5109)

## பற் சிகிச்சை நிலையம்

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில் கே கே எஸ் வீதி, கொக்குவில்) தினசரி; 4 பி. ப. — 6 பி. ப. ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப.
(3215)

## சிரமதானம்

(கொழும்புத்துறை)

கொழு புத்துறை துண்டி மயான பரிபாலன சபையின் காணி கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தினரால் சிரமதானப்பணி மூலம் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இம்மன்றத்தினர் சார்பில் இக்காணியில் மரம் நாட்டு வைபவமும் இடம் பெற்றுள்ளதாக மன்றச் செயலாளர் திரு. ப. நந்தகுமார் தெரிவித்துள்ளார் (24)

## டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.
(சி 5399)

## விற்பனைக்கு

அழகிய படத்துடனான கலண்டர்கள் விற்பனையாகின்றன. பல வர்ணக் கலர்களில் விலாசம் பதிப்பித்தும்பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகள் தங்களின் தேவைக்கேற்றபடி கொள்வனவு செய்து ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஸ்ரீ காந்தா அச்சகம் -புத்தகசாலை 330, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.
(3640)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு விநாயகர் வீதியில் வீட்டுடன் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு: என். தில்லைவினாயகம் பிரசித்த நொத்தாரிசு, நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம்.
(சி-5422)


Computer Programming in Basic Language

4 MONTHS
திங்கள், வெள்ளி வகுப்புகள்

ஆரம்பம்: 20 - 11 - 1992
8. 30 மணி

Lectures By: S. P. SIVAPATHASUNDARAM M. I. D. P. M [Lond.]

★ கட்டணம் தவணைமுறையில்
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

I. A. B.
Foundation Inter, Final
SHORT HAND & TYPING


## விற்பனைக்கு

நல்ல நிலையில் ஸ்கூட்டர் ஒன்று விற்பனைக்குண்டு. (VESPA P150A) யூனிவேர்சல் வீடியோ, 404 அரசடி வீதி திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (3664)

## இலவச ஆயுர்வேத வைத்தியசாலை

பருத்தித்துறை பிரதேச சபையினால் வைத்திய வசதிகள் குறைந்த கற்கோவளம் கிராமத்தில் இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை பிரதேச சபையின் ஆயுர்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் இந்திராணி யோ. மரியரட்ணம் அவர்களின் பொறுப்பில் இயங்க விருக்கும் இவ் வைத்தியசாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது (25)

## அழகியல், தொழில்நுட்ப கண்காட்சி

(பருத்தித்துறை)

புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் அழகியல், தொழில்நுட்பம் பொருட் கண்காட்சி வித்தியாலய அதிபர் திரு எ யோகுவா தலைமையில் புதன்கிழமை ஆரம்பமானது இவ் அழகியல் தொழில்நுட்ப பொருட்காட்சியைப் பெருந்தொகையான மாணவ மாணவிகள் பார்த்துப் பயன் பெற்றுக் கொண்டனர். (25

## தட்டெழுத்து போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க எழுது வினைஞர் சேவையின்கீழ் தட்டெழுத்தாளருக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை இம்மாதம் 28ஆம் திகதி இங்கு நடைபெறவுள்ளதாக கொழும்பிலிருந்து அரச அதிபர் செயலகத்திற்கு அறிவித்துள்ளார்.

28ஆம் திகதி நடைபெறவுள்ள பரீட்சைக்கான ஏற்பாடுகளை அரச அதிபர் கொழும்பிலிருந்து மேற்கொண்டுள்ளார் என அறியப்படுகிறது. (42)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் வழங்கப்படும் இலவச சீருடைகளைப் பெறத் தகுதியுடைய மாணவர்கள் தமது விண்ணப்பங்களை இம் மாதம் 22ஆம் திகதிக்கு முன்

## செஞ்சோலையின் ஒலிநாடா இன்று வெளியீடு

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று மாலை ஆறு முப்பது மணியளவில் செஞ்சோலை பாடல்களின் ஒலிப்பதிவு நாடா வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல பாகங்களிலும் நடாத்தப்பட்டு இலட்சக் கணக்கான மக்களினதும், போராளிகளினதும் பாராட்டுதல்களைப் பெற்ற செஞ்சோலைப் பாடல்களின் ஒலிப்பதிவுநாடா வெளியீட்டு நிகழ்ச்சியில் வாழ்த்துரைகள், சிறப்புரைகள், மதிப்பீட்டு உரைகள் என்பவற்றுடன் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவிருக்கிறது.

இந்த நிகழ்வு பிற்பகல் நான்கு முப்பது மணிக்கு நடைபெறும் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்ததாயினும் தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்பகல் ஆறு முப்பது மணிவரை ஒத்தி போடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சனசமூக நிலைய திறப்புவிழா

உடுவில் நாகம்மாள் வீதியில் புதிதாக அமைக்கப்பெற்ற அலிஸ்ரன் சனசமூக நிலையமும், மாவீரர் சிறுவர் கல்வி நிலையமும், பெண்கள் தையல் பயிற்சி நிலையமும் நாளை (20 - 11 - 92) பிற்பகல் 4 00 மணியளவில் திறந்து வைக்கப்பட உள்ளன.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்கள்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## பகிஷ்கரிப்பு இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

சித்தமருத்துவத்துறை மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பகிஷ்கரிப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றம் அறிவித்துள்ளது.

எனினும் தமது எதிர்ப்பைக் காட்டுமுகமாக கறுப்புப்பட்டி அணிந்து மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்வர் என தெரிய வருகின்றது.


## 45ஆம் நாள் நினைவலைகள்



மேஜர் கார்வண்ணன் (பீற்றர்)

வீரத்தாயின் மடியில் 04 - 06 - 1969
ஈழமண்ணின்அடியில் 06 - 10 - 1992

## 3-ஆம் ஆண்டு நினைவில்



சிவஞானசுந்தரம் சிவரஞ்சன் (ரஞ்சன்)

அன்பு அன்னை அரவணைப்பில் 18 - 12 - 1970
அன்னிய இராணுவ கொடூரத்தில் 03 - 02 - 1989

01 1 -1992 அன்று கட்டைக்காடு மினிமுகாம் தகர்ப்பின்போது விழுப்புண்ணடைந்து 06-10-92 அன்று வீரச்சாவடைந்த யாழ். மாவட்ட விஷேட வேவுப்பிரிவுப் பொறுப்பாளர்

Foundation Inter, Final

**SHORT - HAND & TYPING**

விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

[Pioneers in Computer Education]

**16,3rd, Cross Street, Jaffna.**

[சி-5423]

# நினைவு கூருகின்றோம் ...

## 1992-11-19

1984-ம் ஆண்டு இதேதினத்தில் மன்னார்- அடம்பன் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப் பட்ட 4- தமிழர்கள்.

1985-ம் ஆண்டு, தமிழகத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோட்டார் சையிக்கிள் விபத்தில் எம்மைப் பிரிந்த-

**கோபி** (மகாதேவன் இளங்கோ- திகரி, தும்பளை,பருத் தித்துறை- யாழ். )

1987-ம் ஆண்டு இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 3- குழந்தைகள்- தந்தை.

1988-ம் ஆண்டு காரைநகரில், இந்தியப்படையின ரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச் சாவெய்திய-

**சக்கரை** (தம்புதுரைராஜா- காரைநகர்- யாழ். )

**கோபி** (ஆறுமுகம் தவபாலன்- காரைநகர்- யாழ். )

கிளிநொச்சியில், தேச விரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட, கிளிநொச்சிமகாவித்தியாலய மாணவன்

1990-ம் ஆண்டு மாவிட்டபுரம், தச்சன் காட்டுச்சந்தி பகுதியில் சிறிலங்காப்படையினருடன்ஏற்பட்டநேரடிச்சம ரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். மணிமேகன்** (இராசையா அனுராம்- அனுராம் வீதி, சோத்துப்பிடிச்சி, சண்டிலிப்பாய் தெற்கு- யாழ். )

பருத்தித்துறை- புலோலிப்பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/5421]

தமது விண்ணப்பங்களை இம் மாதம் 22ஆம் திகதிக்கு முன் னர் சபையின் தற்காலிக அலு வலகத்தில் ஒப்படைக்கும் வண்ணம் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## சாராய பாவனை அதிகரிப்பு

சாராய நுகர்ச்சி கடந்த ஒருவருடத்தில் மட்டும் 9 பில் யன் லீற்றர்களால் அதிகரி த்து இருப்பதால் கலால் ஆணையாளர் கொழும்பில் விடுத்த செய்திக் குறிப்பு ஒன் றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் 1186 புதிய லைசலன்சுகள் சாராய விநியோகத்திற்கான கடை கள், பார்கள், மற்றும் சில்ல றைக் கடைகளுக்கு வழங்கப் பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நெல்வயல்களில் புதுவகை நோய்

தென்மராட்சிப் பகுதியில் வயல்களில் உள்ள நெற்பயிர் களுக்கு ஒருவித நோய்கள் பிடித்துள்ளன. இதனால், விவசாயிகள் பெரும் கவலை யடைந்துள்ளனர்.

தமது வேளாண்மை இவ் வருடம் பாதிப்பு அடையுமா என யோசிக்கின்றனர். (24)

## கருத்தரங்கு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் மா, தென்னை போன்ற பயிர்ச் செய்கைகளை பாது காத்தல் பராமரித்தல் சம்பந்த மான விவசாயக் கருத்தரங் குகள் சம்பந்தப்பட்ட உத்தி யோகத்தரினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

வண்டுகள் பூச்சிகளின் தாக் கத்தினால் பாதிக்கப்படும். பயன்தரும் மரங்களை பாது காப்பது பற்றியதும், மேற் குறித்த மரங்களை பராமரிப் பது பற்றியதுமான விளக்கக் கருத்துக்களை விவசாய உத்தி யோகத்தர்கள் மா, தென்னை செய்கையாளர்களின் முன் விளக்கமளித்து வருகின்றனர். (யோ)

விழுப்புண்ணடைந்து 06-10-92 அன்று வீரச்சாவடைந்த

யாழ். மாவட்ட விஷேட வேவுப்பிரிவுப் பொறுப்பாளர்

# மேஜர் கார்வண்ணன் ( பீற்றர் )

## (சிவஞானசுந்தரம் சிவசோதி/சிவம்)

"பத்துத் தடவை பாடைவராது  
பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா  
செத்து மடிவது ஒரே ஒருமுறைதான்  
சிரித்துக் கொண்டே போர்க்களம் வாடா"

என்று எம் தெருவெங்கும் கூவித்திரிந்த குயிலொன்று இன்று விடியலைத்தேடிப் பறந்து விட்டது.

சின்ன வயதினிலே சிங்களவர் கொடுமைகண்டு  
சீறியே எழுந்தங்கு புலியெனப் பாய்ந்தெழுந்து  
இங்கவர் கொட்டம் தீர்த்து அடியொடு  
விரட்டியங்கு எம்மவர் விடியல் தேடி  
விந்தைகள் பல புரிந்தாய் கண்ணது தூங்காமலே.

முதல்வெற்றி பிறந்த மண்ணில் 14 அன்னியனும் அதைவிடுத்து அதேயிடத்தில் குலங்கெடுக்கும் கோடரிக்காம்புகள் 17 பேரும் இன்னொரு சந்தர்ப்பத்தில் மேலும் 3 கோடரிக்காம்புகளையும் மிருசுவில் சந்தியில் அழித்தொழித்தாய் கார்வண்ணா.

இத்துடன் முடிந்ததா உன் வீரச்சாதனை

பலாலியில் ஏழு பேரும். ஆனையிறவில் எண்ணற்றோரும் பின் உலகமே வியக்கும் வண்ணம் தீவகத்தில் துட்டகைமுனு என்று அரசினால் வர்ணிக்கப்பட்ட கெப்பேகடுவா உட்பட சிங்களத் தளபதிகள் பத்துப்பேரின் உடல்களையும் கண்ணிவெடியில் சிதறச் செய்தும் சாதனை படைத் தாயே கார்வண்ணா.

சாதனையாளர் வரிசையில் அண்ணனிடம் வாரியணைத்து முத்தம் பெற்று வீரக் கரங்களால் விருதும் பெற்றாயே கார்வண்ணா.

கடைசியாகக் கட்டைக் காட்டில் முகாம் தகர்த்து அரசே கண்ணீர் வடிக்க 5 கோடியிலும் பெறுமதிமிக்க ஆயுதங்கள் அள்ளிய சாதனையிலும் பங்குகொண்டு வெற்றிவாகை சூடினாயே கார்வண்ணா.

இவர் விழுப்புண்ணடைந்தவேளை சிகிச்சையளித்த  
டாக்டர்கள், தாதிமார்கள், ஊழியர்கள், யாவருக்கும்  
மற்றும் இறுதிக் கிரியையின்போது கலந்துகொண்ட அனைவருக்கும்  
நன்றி கூறுகின்றோம்.

இத்தாக்குதலில் வீரச்சாவடைந்த மற்றைய போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்

இன்றைய தினம் (19 - 11 - 92) இந் நினைவால் எமதில்லத்தில் நடை பெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர் நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும அன்புடன்அழைககின்றோம்

உன் பிரிவாலும் தம்பி ரஞ்சனின் பிரிவாலும கண்கலங்கி நிற்கும்

குருக்கள் மாவடி, மிருசுவில். அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள்

(3651)

சுண்டுக்குளி சீனா நூலகம்



# சிறப்பிதழ்

# தமிழீழ காவல்துறையின் ஓராண்டு நிறைவு

## 19 - 11 - 1991





## 19 - 11 - 1992



தமிழீழ தாயகத்தில் சட்டம் ஒழுங்கைப் பேணிப் பாதுகாப்பதுடன், தமிழ் மக்களின் நலனுக்கும், நல்வாழ்விற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் அயராது கருமமாற்றும் தமிழீழ காவல்துறை இன்று அதன் ஓராண்டு காலத்தை நிறைவு செய்கிறது. சேவையே தமிழீழ காவல்துறையின் அடிப்படைத் தத்துவமாகும்.

காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை 19-11-1991இல் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொண்ட வைபவத்தில் தமிழீழ காவல்துறை உதயமாயிற்று.

தமிழீழ காவல்துறையானது

வாய்ப்பு கிடைக்காத பகுதியான வன்னி மாவட்டத்துக்கான முதலாவது தமிழீழ காவல்துறைப் பணிமனை வரும் டிசம்பர் மாதத்தில் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

தமிழீழ காவல்துறை ஆரம்பித்து ஒரு வருட காலப்பகுதியில் காவல் துறையில் இணைந்து பயிற்சி பெறும் ஆண்கள் பெண்கள் இருபகுதியினரினதும் எண்ணிக்கை



முறைப்பாடுகளை ஒன்றோடொன்று இணைத்து நிர்வாகச்சிக்கலை ஏற்படுத்தாமலும் நிர்வாகத்தை வேறாக்கும் வகையிலும், பணியினை இலகுவாக்கும் நோக்கத்துடனும் முறைப்பாடுகள் நான்கு பிரிவுகளாக் வகுக்கப்பட்டுள்ளன.

★ **பாரிய குற்றம் (உ-ம்)** கொலை, கற்பழிப்பு, ஆட்கடத்தல், தீயால் சேதம் விளைவித்தல்.

★ **போக்குவரத்துக் குற்றங்கள்** போக்குவரத்து விதிமுறைகளை மீறுகிற அனைத்தும் இடபிரிவில் அடங்கும்.

மற்றும், குடியியல் சம்பந்தமான முறையீடுகளை விசாரிக்கப் பிரத்தியேகமான குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழீழ காவல் துறை வழங்கும் தீர்ப்புகள் தொடர்பாக ஆட்சேபம் தெரிவிக்க விரும்புபவர்கள் தமிழீழ தேசியத் தலைவர் அல்லது காவல்துறைப்பொறுப்பாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

சாதாரண பணிமனைகள்

மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு கருமமாற்றி வருகிறது. காவல்துறையின் செயற்பாடுகள் எப்படி அமைய வேண்டும் என்பது குறித்து பலர் தமிழீழ காவல் துறையினருடன் தொடர்பு கொள்கிறார்கள். மக்களுடைய கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் முக்கியத்துவம் தரப்படுகின்றன. எழுத்து மூலம் கருத்துகள், அபிப்பிராயங்கள் தெரிவிப்பவர்களுக்கு அவர்கள் அபிப்பிராயம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எழுத்து மூலம்



இலச்சினையைச்சுற்றி காணப்படும் சிவப்பு சமத்துவத்தையும், மஞ்சள் தர்மத்தையும் வெள்ளை சமாதானத்தையும் நீலம் சட்டத்தையும் ஒழுங்கையும் குறிப்பிடுகின்றன.

### காவல்துறை உறுப்பினரின் பொதுவான கடமைகளில் சில

★ தமிழீழ மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் பங்கம் ஏற்படாதவாறு பாதுகாப்பது.

தேவையைக் கருதி சிறப்புக் கடமையைப் புரியுமாறு காவல்துறை உறுப்பினர்களுக்கு தேசியத் தலைவர் கட்டளையிடலாம்.

தமிழீழ மண்ணில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்ட இந்த தமிழீழ காவல்துறை தேசியத் தலைவரின் வழிநடத்தலிலும் மக்களின் ஒருங்கிணைந்த ஆதரவிலும் குறுகிய காலத்தில் பெரியவளர்ச்சி அடைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

தமிழீழ காவல்துறை ஸ்தாபகமாகி ஒரு வருட காலப் பகுதியில் தமிழீழ நிர்வாக

தமிழீழ காவல்துறையானது தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் நேரடிப் பொறுப்பின் கீழ் இயங்கி வருகின்றது தமிழீழ காவல் துறையின் சேவை குறித்த பணிகளுக்குப் பொறுப்பாளரான திரு. ப. நடேசன், காவல்துறையை அதன் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை நிர்வகித்து வருகிறார்.

காவல்துறையின் சேவை குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு எட்டும் வகையிலும், காவல்துறையினை விஸ்தரிக்கும் எண்ணத்துடனும் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு சுன்னாகம், சங்கானை, கோப்பாய் சாவகச்சேரி, பளை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளிலும் தமிழீழ காவல் துறை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த வளர்ச்சிக் கட்டத்தில் ஓர் அங்கமாக நகரப் போக்குவரத்துப் பிரிவும், குற்றப் புலனாய்வுப் பிரிவும் செயற்படுகின்றன. தமிழீழ காவல்துறையின் சேவை



இயல்பாகவே கூடியிருப்பதைக் கவனிக்க முடிகிறது. இதுவரை இரு அணிகள் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளன. மூன்றாவது அணியின்பயிற்சிஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றது. ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசமின்றி இருதரப்பினருக்கு சரிசமமான பயிற்சி தரப்படுகிறது.

★ **சிறு குற்றங்கள் (உ-ம்)** சண்டை சச்சரவு, சிறு காயம் விளைவித்தல் சிறுகளவு

★ **சாதாரணகுற்றங்கள் (உ-ம்)** குடும்பப்பிரச்சினை, நையாண்டிசெய்தல், குடிபோதை, வாய்ச் சண்டை



சாதாரண பணிமனைகளிலிருந்து பாரப்படுத்தப்படும் பாரிய குற்றங்களை குற்றப் புலனாய்வுத்துறை விசாரித்து வருகிறது. அரசியல் சம்பந்தமானது என்று கருதப்படும் குற்றங்கள் அல்லது தேசத் துரோகக் குற்றங்களும் புலனாய்வுத் துறையிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்படுகின்றன.

இப்போதைய யுத்தகால பகைப்புலத்தைக் கருத்திற்கொண்டு தமிழீழ காவல் துறையினரால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது. தமிழீழ அறிவு ஜீவிகள், கல்விமான்கள், சமூக சேவை அமைப்புகள், வழக்கறிஞர்கள் இளைப்பாறிய நீதிபதிகள், வரலாற்று நிர்பந்தப் காரணமாக உத்தியோகத்திலிருந்து வெளியேறிய அல்லது இளைப்பாறிய நீதிபதிகள் ஆகியவர்களின் உதவியுடன் எமது கலாசார பாரம்பரியப் பின்னணியில் சட்டங்கள் ஆக்கப்பட்டு அதற்கு அமைவாக முறைப்பாடுகள் விசாரிக்கப்படுகின்றன.

இது வரை காலமும் நாம் கண்டது அந்நியரது நீதி நிர்வாக ஒழுங்கு முறையாகும். சிங்கள ஆட்சியாளரின் காவல் துறை அடக்கு முறையின் சின்னமாக விளங்கியது. தமிழீழத்தின் காவல்துறை தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பிரதிபலிக்கின்ற விடுதலைச் சின்னத்தின் ஒரு பகுதியாகச் செயற்படுகிறது. தமிழீழ காவல் துறை மக்களின் நலன் கருதி மக்களுக்காகவே உருவாக்கப் பட்டது. ஆகவே தமிழீழ மக்களின் நலன் கருதி நியாயமும் உண்மையும் பாதுகாப்பதை தனது கடமையாகக் கொண்டு தமிழீழ காவல் துறை செயற்படுகின்றது.

பொதுமக்கள்-காவல் துறை தொடர்பு என்ற கோணத்தில் தமிழீழ காவல் துறை பொது



பதில் தரப்படுகிறது மேலும் மக்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிவிக்க வேண்டும் என்று காவல் துறை எதிர்பார்க்கிறது.

தமிழீழ காவல் துறையின் சின்னத்தில் புலியின் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது

ஏற்படாதவாறு பாதுகாப்பது.

★ தமிழீழ மக்களின் பாதுகாப்பையும் அமைதியையும் நிலைநாட்ட உழைப்பது.

★ குற்றச் செயல்களைத் தடுப்பது.

★ குற்றவாளிகளையும் சந்தேக நபர்களையும் கைது செய்து நீதியின் முன் நிறுத்துவது.

★ சமூக விரோத சக்திகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது.

★ நீதிமன்ற நிர்வாகத்திற்கு உதவுவது.

தமிழீழத்தின் அவசிய

பகமாக ஒரு வருட காலப் பகுதியில் தமிழீழ நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் குற்றவியல் செயல்கள் பொதுவாகக் குறைந்து காணப்படுகின்றன. பொதுநிர்வாகத்தில் லஞ்சம், நேர்மையின்மை, ஒழுங்கீனம் ஆகியன பாரிய அளவில் தவிர்க்கப்பட்டுள்ளன. இதனை இப்போது மக்களால் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

இன்றுடன் ஓராண்டைப் பூர்த்தி செய்யும் தமிழீழ காவல் துறை அதன் இரண்டாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் இந்த வேளையில் பொதுமக்கள் இதுவரை வழங்கிவந்த ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றியறிதலைத் தெரிவிக்கிறது. அதே வேளை தொடர்ந்தும் பொதுமக்களின் ஆதரவையும், ஆக்கபூர்வமான பங்களிப்பையும் தமிழீழகாவல் துறை வேண்டி நிற்கின்றது.



# எழுச்சி வார கருத்தரங்குகள்

மாவீரர் நாள் எழுச்சி வாரத்தைஒட்டி நடைபெறும் கருத்தரங்கில் ஐந்தாம் நாளான இன்று கருத்தரங்குகள் நடைபெறும் இடங்கள்

வலிகாமம் கோட்டத்தில் சண்டிலிப்பாய் வட்டத்தில் சங்குவேலி ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலையததிலும், கோப்பாய் வட்டத்தில் புத்தூர் மத்திய சனசமூக நிலையத்திலும் நல்லூர் வட்டத்தில் கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்திலும் சங்கானை வட்டத்தில் தொட்டிலடி சனசமூக நிலையத்திலும் தெல்லிப்பழை வட்டத்தில் மல்லாகம் ஞானப்பிரகாச சனசமூக நிலையத்திலும் சண்டிலிப்பாய் வட்டத்தில் சீரணி மணிமேகன் சனசமூக நிலையத்திலும் மாலை 6 30 மணியளவில் அவ்வப்பகுதி சிற்றூர்ப்பொறுப்பாளர்களின் தலைமையில் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

வடமாராட்சிக் கோட்டத்தில் கரவெட்டி வட்டத்தில் இரவு 7.30 மணியளவில் ஞானாசாரியார் கல்லூரியில் வளவன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் பூங்கோதை தயா ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்டத்தில் இரவு 7.30மணியளவில்தனங்கிளப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் யோகியின் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் அன்பு உரை நிகழ்த்துவார்.

கொடிகாமம் வட்டத்தில் இரவு 7.00 மணியளவில் கரம்பைக்குறிச்சி மதிஒளி சனசமூக நிலையத்தில் தியாகி அவர்கள் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் அனந்தா அவர்கள் உரை நிகழ்த்துவார்.

தென்மராட்சிக் கோட்டத்தில் பளை வட்டத்தில் இரவு 7.00 மணியளவில் அல்லிப்பளை வேல்ராஜ் சனசமூக நிலையத்தில் கலைவாணன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் தமிழ்மங்கை உரை நிகழ்த்துவார்.

> மாவீரர் எழுச்சி வாரம்
> ஐந்தாம் நாள்
> நிகழ்ச்சிகள்

சாவகச்சேரி வட்டத்தில் இரவு 7-00 மணியளவில் நுணாவில் மேற்கு அமெரிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் அன்புடை நம்பி தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் கோபால், தமிழ் மங்கை, ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

தீவகம் கோட்டத்தில் வெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இரவு 7 00 மணியளவில் புலையிரத நிலைய முகாமில் முருகப்பன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் சேரலாதன் மல்பினி ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

கடற்புலிகளால் வடமராட்சிகிழக்குதாளையடிவட்டத்தில்பிற்பகல்5 00 மணியளவில்குடத்தனைநினைவுத்தூபியடியிலும் பிற்பகல் 6.30 மணியளவில் பொற்பதி சனசமூக நிலையத்திற்கு அருகாமையிலும் வடமராட்சி வடக்கில் முற்பகல் 10.00 மணியளவில் இன்பருட்டி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 4.00 மணியளவில் சுப்பர் மடம் சனசமூக நிலையத்திலும் வலிகாமம் கிழக்கு வட்டத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் அராலி மேற்கு சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 5.00 மணியளவில் அராலி தெற்கு சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 6-00 மணியளவில் அராலி கிழக்கு சனசமூகநிலையத்திலும் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன,

## துப்புரவு செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிக் கழகத்தின் தொண்டர்களால் மாவீரர் எழுச்சி வாரத்தைமுன்னிட்டு கொக்குவில் புகையிரத நிலைய வீதியில் உள்ள கான்களும் மற்றும் வீதியோரங்களும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இச் சிரமதானப் பணியில் மேற்படி கழகத்தைச் சேர்ந்த 60இற்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# அடுத்த ஜனவரியில் தேர்தல் நடக்கும் சாத்தியம்

எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் தேர்தல் ஒன்றை நடாத்த பிரேமதாச அரசாங்கம் தயாராகி வருவதாக ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இக்காலப்பகுதியில் பொதுத் தேர்தலை அல்லது உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதற்கு அரசு முயலும் என எதிர்பார்க்கப்படுவதாக மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது

இதற்கான ஆயத்தங்களில் தேர்தல் திணைக்களம் துரிதமாக ஈடுபட்டுவருவதாக திணைக்களவட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

அச்செய்தியில் மேலும் தேர்தலை நோக்கமாக கொண்டே 200 ஆடைதயாரிப்பு நிலையங்களை பிரேமதாச அரசாங்கம் அவசர அவசரமாக அமைத்து வருவதாகவும், வரவு செலவுதிட்டத்தில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் பாடசாலை பிள்ளைகளுக்குசீருடைத்துணி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் உட்பூசலும் எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமையின்மையும் காணப்படும் இவ் வேளையில் பொதுத்தேர்தலை நடாத்துவதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றியை தேடிக் கொள்ளலாம் எனவும் அரசாங்கம் எண்ணியுள்ளது.

இவ்வாறு நடாத்தப்படும் தேர்தல் லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா, சந்திரிகாகுமாரணதுங்காவின் பலம் குறித்து நாடிபிடித்துப் பார்க்க உதவும் எனவும் அரசாங்கம் எண்ணுகிறது. இதன் மூலம் ஜனாதிபதி தேர்தலில் தனது நிலைகுறித்து அறிந்து கொள்ள முடியும் என பிரேமதாசா நினைக்கிறார்.

எனவே பொதுத்தேர்தலோ அல்லது உள்ளூராட்சி தேர்தலோ ஜனவரியில் நடாத்தப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சு. கட்சியின் உட்பூசல் மூலம் அரசியல் இலாபம் தேடவில்லை

**—காமினிதிசாநாயக்க**

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியினருக்கு இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினையை பெரிதுபடுத்தி அதன் மூலம் இலாபம் அடைய வேண்டிய தேவை எதுவும் எனக்கு இல்லை. அவர்களை ஒற்றுமைப்படுத்தி நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்டு வதிலேயே நான் அக்கறை கொண்டுள்ளேன் என்று முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவருமான காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்; ஒரு அரசியல் கட்சியின் முக்கியஸ்தன் என்ற வகையில் மக்களின் ஒத்துழைப்பையே நாடுகிறேனே தவிர அரசியல் வாதிகளை அல்ல எனவும் குறிப்பிட்டார்.

## உதவிப்பணம் வழங்கப்படுகிறது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகிய நோய்களால் பீடிக்கப்பட்டு உதவிப் பணம் பெறும் நோயாளர்களின் ஆடி, ஆவணி மாதங்களுக்கான உதவிப்பணம் பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது. இப்பிரதேச செயலர் பிரிவில் இந்நோய்களால் பீடிக்கப்பட்டு உதவிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் நோயாளர்கள் தமது உதவிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. சி. முருகேசபிள்ளை அறிவித்துள்ளார், (25)

## ஒக்ஸ்பாம் உதவி

பிறமாவட்டங்களில் இருந்தும் பூநகரி, தட்டுவன் கொட்டி பகுதிகளிலும் இருந்து இடம் பெயர்ந்து வந்து கோணாவில் காந்திக் கிராமம், ஸ்கந்தபுரம், விஸ்வமடு 10-ம் கட்டை ஆகிய முகாம்களில் தங்கி இருக்கும் சுமார் 500 குடும்பங்களுக்கு ஒரு மில்லியன் ரூபா செலவிலான உடுபுடவைகள், பாய் போன்றவற்றையும் அவர்களின் தொழிலுக்கு உதவும் நோக்கத்துடன் அரிவாள், கோடரி மண்வெட்டி போன்ற விவசாய உபகரணங்களையும் வழங்க ஒக்ஸ்பாம் முன்வந்துள்ளது. இவை கிளிநொச்சி மாவட்ட ஒக்ஸ்பாம் இணைப்பதிகாரி திரு. எஸ். ரி. பத்மநாதனின் வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சி மாவட்ட அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக வழங்கப்படவுள்ளது. (16)

# மாவீரர் எழுச்சி வாரம் உளப்பூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய விடுதலைப் போராடடத்தில் எதிரிப்படைகளுடன் திரமுடன் போராடி தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களை நினைவு கூரும் முகமாக அனுஷ்டிக்கப்படவிருக்கும் மாவீரர் வாரத்தையொட்டி ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள மாவீரர் எழுச்சி வாரம் மிகவும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது

குடா நாட்டில் மட்டுமல்லாது வட தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மாவீரர் எழுச்சி வாரம் மிகவும் சுறுசுறுப்பாகவும் உளப்பூர்வமாகவும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி பகுதிகளில் உள்ள அனைத்து பிரதான வீதிகள், சந்திகள், பொது இடங்கள், கேந்திர நிலையங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் உட்பட அனைத்துகள் அத்துடன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நினைவு வளைவுகள், நினைவுப்பந்தல்கள், நினைவுச் சிகரங்கள் என்று பல்வேறு வகையான எழுச்சியூட்டும் அம்சங்கள் காணப்படுகின்றன. தொடர்ந்தும் இவ்வாறான, வேலைகளில் பெரும் திரளான மக்கள் வயது வேறுபாடு இன்றி பங்குபற்றி வருகின்றனர்.

வீதிகள் புனரமைத்தல், புதிய வீதிகள் அமைத்தல் போன்ற பல்வேறு வேலைகளை மக்கள் சிரமதான அடிப்படையில்மேற் கொண்டு வருகின்றனர். இவ்வாறான எழுச்சியூட்டும் வேலைகள் குடாநாட்டின் தென்மராட்சி வடமராட்சி, வலிகாமம், யாழ். நகர் போன்ற பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வருவதாக எமது பிராந்தியச் செய்தியாளர்கள் அங்கிருந்து அறிவித்துள்ளனர். இவ்வாறாக மாவீரர் நாள் ஏற்பாடுகளும் செயற்பாடுகளும் நாளுக்கு நாள் அதிகரிததுவருவதையும் அவதானிக்க முடிகிறது.

(க),(21),(24), (11),(25),(35

## மாவீரர் எழுச்சிவார 5-ம்நாள் சிரமதானப் பணிகள்

மாவீரர் எழுச்சி த்வாரதின் ஐந்தாம் நாளான இன்று யாழ். குடாநாட்டில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்கள்:

தீவகம் கோட்டத்தில் யாழ் உதயதாரகை சனசமூகநிலைய வீதியும், கலைவாணி சனசமூக நிலைய வீதியும் சிறுப்பிட்டி சிற்றூர் மக்களால் துப்பரவு செய்யப்படும்.

வலிகாமம் கோட்டத்தில்

## 45-ம் நாள் நினைவில்



## அந்தியேட்டிக் கிரியை



சங்கங்கள் உட்பட அனைத்து மக்கள் கூடும் இடங்களிலும் மாவீரர் எழுச்சி வாரத்தை எடுத்துக் காட்டும் எழுச்சிக் கோலங்கள் பரவிக் காணப்படுகின்றன சிவப்பு, மஞ்சல் வர்ணத் தோரணங்கள் எழுச்சிக் கோலங்களைத் தாங்கியும், மாவீரர்களது புகழ்பரப்பியும், பதாகைகள் ஆங்காங்கே வீதிகளுக்கு குறுக்காக கட்டப்பட்டிருக்கின்றன இவற்றை விட பிரதான வீதிகள் எங்கும் மாவீரர் நாளை எடுத்தியம்பும் சுவர் ஒட்டி

தீவகம் கோட்டத்தில் யாழ் புகையிரத நிலைய முகாம் துப்புரவு செய்தல் பணி திரு' முருகப்பன் தலைமையில் முகாம் மக்களால் மேற்கொள்ளப்பட உள்ளது.

வடமராட்சிக் கோட்டம் உடுப்பிட்டி வட்டத்தில் உடுப்பிட்டிச் சந்தியும், வல்வை வீதியும் திரு. செல்வராசா தலைமையில் உடுப்பிட்டி மக்களால் துப்புரவு செய்யப்பட உள்ளது

கோப்பாய் வட்டத்தில்

வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்டத்தில் இணுவில் கலாசோதி சனசமூக நிலையமும் உடுவில் கந்தர் கோயில் முகாமும் வலி.காமம் கிழக்கு பகுதியில் நாவாந்துறையிடன் சந்தியும், கடற்கரை வீதியும் வடமராட்சி கிழக்கில் குடத்தனைச் சந்தியிலுள்ள பன்னிருவேங்கைகளின் நினைவுத் தூபி அமைந்திருக்கும் சுற்றாடல் பகுதியும் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

## பதவி உயர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. வி சே ஏகாம்பரநாதன் கல்வி அமைச்சினால் கல்வி நிர்வாகச் சேவை வகுப்பு IIக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இவர் முன்னர் புலோலி கொத்தணி அதிபராகவும், புலோலி வேலாயுதம் மகாவித்தியாலய அதிபராகவும் பணியாற்றியவராவார். [25)

## உருவபடம்
## திரை நீக்கம்

(வடமராட்சி)

மாவீரர் லெப்டினன்ட் திலக் (சேதுலிங்கம் கிருஷ்ணவரதன் — ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை) உருவப்படம் எதிர்வரும் 21-ம் திகதி மாலை 5 மணிக்கு வல்வையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## விசேட பூசை அபிஷேகம்

(வடமராட்சி)

பொலிகண்டி கிழக்கு மருதாப்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி மாலை 5 மணிக்கு சாயிபாபா பிறந்த தினத்தை யொட்டி விசேட பூசையும் அபிஷேகமும் நடைபெறும். (யோ)

## காணி தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நிலஅளவை, நிலவரைபடம் நில அளவைப்பயிற்சி, காணிப்பிரச்சினைகள், காணிச்சட்டங்கள், காணி நிர்வாகம், காணிப்பதிவு ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டோருக்கான கலந்துரையாடல் ஒன்று நில அளவையாளர் ஒருங்கிணைப்பு கழகத்தினரால் நாளை வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரியிலுள்ள குமாரசாமிமண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் காணிநிர்வாகம். நில அளவைத்துறையை கொம்பியூட்டர் மயப்படுத்துவதனால் உள்ள நன்மைகள் காணி விதிகளை தற்காலிக நடைமுறைக்கு ஏற்றவாறு புனரமைத்தல், நில, நீர், வான் அளவைகளில் நவீன விஞ்ஞானத்தை பிரயோகித்தல் காணிப்பிரச்சினைகளில் காவல்துறையினரின் பங்கு நில அபிவிருத்தியும் நிலத்தின் பயன்பாடும் நில அளவையும் நில வரைபடமும், நிலத்தின் பயன்பாடும் பொதுமக்களுக்கு ஆற்றும் பங்கு முதலிய பல்வேறு விடயங்கள் தொடர்பாக கருத்துரைகள் வழங்கப்படஉள்ளன.


இந்நிகழ்ச்சியில் பங்குபற்றி பயன் பெற விரும்புவோரும் இத்துறையுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் நில அளவை, நில வரைபடம் இவற்றில் பயிற்சி பெறவிரும்பும் இருபாலாரும் இத்துறையில் உடனடி வேலை வாய்ப்பைப் பெறவிரும்புவோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுககப்பட்டுள்ளது.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவும், பெற்றோர்தின விழாவும் இன்று காலை 9 மணிக்கு அதிபர் திரு. கே. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் மருதனாமடம் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகவும் கோப்பாய் கொத்தணி அதிபர் திரு. த. முத்துக்குமாரசுவாமி சிறப்பு விருந்தினராகவும் கோப்பாய் காவல் பணிமனை பொறுப்பதிகாரி செல்வி. யோ. பிரீத்திராணி, கோப்பாய் சிற்றூர் பொறுப்பாளர் செந்தூரன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.



## மேஜர். கார்வண்ணன்
[பீற்றர்)

| | |
|---|---|
| தாய் மடியில் முளையாக | தாயக மண்ணுக்கு உரமாக |
| 04-06 1969 | 06-10-1992 |

கட்டைக் காடு முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த யாழ். மாவட்ட விசேட வேவுப் பிரிவுப் பொறுப்பாளர்
மேஜர். கார்வண்ணன் (பீற்றர்)
சிவஞான சுந்தரம் சிவசோதி (சிவம்)

மாவீரன் கார்வண்ணன் பீற்றர் எங்கள்
மக்களது மனமெல்லாம் நிறைந்த - மேஜர்
பார்புகழும் சிவசோதி வேவுவீரா
பலதிசையும் உனது புகழ் பரவவைத்தாய்
சமாதானப்படை என்று நுழைந்து இங்கே
சண்டாளத் தனம்புரிந்த ராஜீவ் கூட்டம்
பதின்நால்வர் படையவரில் ஒன்று சேர்த்து
பரலோகம் அனுப்பியவன் நீ தான் - சோதி
இதயமற்ற துரோகிகளின் கும்பல் ஒன்றை
ஒருபொழுதில் யமனுலகம் அனுப்பி வைத்தாய்
இவை அனைத்தின் மேலாக தீவகத்தில்
சிங்கள மா ஆதிக்கத்தின் பத்துப் பேரும்
கொப்பே மற்றும் விமல் என்ற தூண்களெல்லாம்
சுக்கு நூறாய் அழித்தொழித்தாய் -
அண்ணன் பராட்ட
கட்டைக் காட்டில் கார்வண்ணா உன்சாதனையில்
ஐந்து கோடி ஆயுதங்கள் அள்ளிக் கொண்டோம்
அழியாத பெரும்புகழைப் பெற்றுவிட்டாய் உலகத்
தமிழினத்தின் நெஞ்சங்களில் - பொறித்துவைப்போம்.
ஈழமதில் உனது பெயர் பொன்னெழுத்தில்
மறக்க மாட்டோம் அருமை நண்பா.

தினமும் உமது பிரிவால் கலங்கிநிற்கும்
உன் அருமை நண்பர்கள்,
சிறி, ராஜா

வெற்றிலைக் கடை உரிமையாளர்,
கொடிகாமம், (மார்க்கற்) (3655, 3659)



## காசிப்பிள்ளை முருகுப்பிள்ளை

| | |
|---|---|
| அன்னையின் மடியில் | ஆண்டவன் அணைப்பில் |
| 23. 03. 1937 | 23. 08. 1992 |

எங்கள் அன்புத் தெய்வமே - நீங்கள்
எம்மைப்பிரிந்து 91ஆம் நாள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் நிலைத்திருக்கும்
உங்கள் அன்பான பேச்சாலும்
பரிவான அணைப்பாலும் யாவரையும் கவர்ந்த தங்களை
உதயத்தில் காலனவன் கவர்ந்தானோ
எங்கள் வெள்ளை நிற மல்லிகையோ
வென்றெடுத்த மாமலரோ எமக்கு வாய்த்த மலரென்று
இருக்க வெள்ளை நிறப்பூவும் அல்ல வென்றெடுத்த
-மாமலருமல்ல
எங்கள் இதயக் கமலம் மறைந்து போனதுஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகிறோம்.

எமது அன்புத் தந்தையின் அந்தியேட்டிக் கிரியை இன்று (19.11.92) பருத்தித்துறையிலும், கனடாவிலும் நடைபெறுகின்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்
குடும்பத்தினர்

(3654)

சிந்தனைக்கு

நம் நற்செயல்களும் நம் தீய செயல்களும்,
நம்மை நிழல்போல் ஓயாது தொடர்ந்து வருகின்றன
- கௌதம புத்தர்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 19-11-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


# எல்லை மீறிச்செல்லும் யுத்தங்கள்

"இந்த தற்கொலைத் தாக்குதலினால் யுத்தம் மிகவும் தொலை தூரம் செல்லும் ஒரு கொடிய நீண்ட பயணம் ஆகத் தெரிகின்றது. கொழும்பில் கூட உயர் அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாத இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும்'' இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் பிரேமதாசா அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார். கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ கொல்லப்பட்டமை தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ கொல்லப்பட்டமை தொடர்பாக அரசாங்கம் பதவி விலக வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி கோரிக்கை விடுத்திருப்பதென்பது ஒன்றும் புதுமையானதொன்றல்ல. மூன்றாம் உலக நாடுகளின் எதிர்க்கட்சி போல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வெள்ளப் பெருக்கில் இருந்து அதிகாரிகள், அமைச்சர்கள் மரணம் வரை எது நிகழ்ந்தாலும் அரசைப் பதவி விலகக் கோருவது வழமைமையான நடவடிக்கையாகும். ஆகையினால், இது குறித்து அரசாங்கம் அலட்டிக் கொள்ளப் போவதோ அன்றி, மக்கள்இது குறித்து பெரிதும் அக்கறை கொள்ளப்போவதாகவோதெரியவில்லை.

ஆனால், யுத்தம் மிகவும் தொலைத் தூரம் செல்லும் ஒரு கொடிய நீண்ட பயணம் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் குறிப்பிட்டமை மிகவும் சரியானதொரு கூற்றாகும். கடந்தகால வரலாறுகள் இதனையே வெளிப்படுத்துபவையாகவும் உள்ளன. ஆனால், இக் கூற்றில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

யுத்தங்கள் எப்பொழுது காலவரையறை செய்யப்பட்டோ அன்றி பிரதேச வரையறை செய்யப்பட்டோ நிகழ்பவை அல்ல. அவை யுத்தங்களை நடத்துபவர்களின் எண்ணங்களையும், திட்டங்களையும் சிலவேளை அப்பிராந்தியத்தின் எல்லைகளையும் மீறி நடைபெற்று வருகின்றன.

இந்தியாவின் விடுதலைப் போராட்டவரலாற்றில் 'யாலியின் வாலபாக்கில்' படுகொலை பரிந்த

# பிரேமதாசா அரசாங்கம் மக்களை ஏமாற்றிவருகிறது

## கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் நிலவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை விட மாற்று வழியேதும் இல்லை. இத்தகையதொரு அரசியல் தீர்வைக் காணத் தவறுவதன் காரணத்தால் தான் அரசாங்கத்துக்கு எதிரான வெறுப்புணர்வு மக்கள் மத்தியில் கூடுதலாக வளர்கின்றது என இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச் செயலாளர் கே. பி. சில்வா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

பிரேமதாசா அரசாங்கம் வடக்கு - கிழக்கு நெருக்கடி நிலையை மேலும் மோசமாக்கிக் கொண்டிருக்கிறது. முடிவுக்கான அறிகுறிகள் எதுவுமின்றி போர் தொடர்ந்து செல்கிறது.

படைகளில் பலியானோரின் எண்ணிக்கையும் படையிலிருந்து விலகிச் செல்வோரின் எண்ணிக்கையும் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கிறது.

இவை தவிர அப்பாவி மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுவதுடன் சொத்துக்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. அகதிகளானோரின் எண்ணிக்கையும் பத்து இலட்சத்தைத் தாண்டிவிட்டது.

இந்நிலையில் எரியும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்கப் போகின்றது என்று போலியான நம்பிக்கையை ஊட்டுவதன் மூலம் உண்மை நிலையை மறைத்து மக்களை ஏமாற்றுவதற்கு பிரயத்தனம் செய்து வருகிறது. ஆனால், இவை தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.

இதற்கெதிராக ஐக்கியப்பட்ட தலைமைத்துவத்தின் கீழ் மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய பிரதான எதிரணி சக்திகளை ஒன்றுபடுத்தக் கூடிய தேர்தல் கூட்டணியொன்றை அமைப்பது அவசியம் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கற்பித்தல் உபகரண சர்வதேச கண்காட்சி

பிறேசில் நாட்டிலுள்ள லக் சம்பேக் கிராமத்தில் அங்குள்ள இலங்கைத் தூதுவராலயத்தினால் கற்பித்தல் உபகரணங்கள் தொடர்பான சர்வதேச கண்காட்சி ஒன்று இவ்வாண்டு இறுதியில் நடாத்தப்பட உள்ளதாகவும். இக்கண்காட்சியில் இலங்கையிலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 1, ஆண்டு 2 வகுப்புக்களில் கற்கும் மாணவர்களுக்கு பயன்படுத்தக் கூடிய கற்பித்தல் உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட உள்ளதாகவும் வடக்குக், கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திரு. மா. தியாகராசா சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தி உள்ளார்.

இக் கண்காட்சியில் வைப்பதற்கு சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர் மூலம் சிறந்த இரு கற்பித்தல் உபகரணங்களைத் தெரிவு செய்து அனுப்புமாறும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன் இக் கண்காட்சியை நடாத்த ஒழுங்கு மேற்கொண்டவர்கள் பாடசாலைச் சுற்றாடலில் மாணவர் தொழிற்பட்டுக் கொண்டிருத்தலைக் காட்டும் புகைப்படம் ஒன்றையும் பார்ப்பதற்கு விரும்புவதனால் அத்தகைய புகைப்படம் ஒன்றையும் தவறாது தமக்கு அனுப்பி வைக்குமாறும் இவர் மேலும் கேட்டுள்ளார், (17)

# பிரவேச, பால பண்டித பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தினால் கடந்த ஆடி மாதத்தில் நடாத்தப்பட்ட பிரவேசபண்டித, பாலபண்டித, பண்டித பரீட்சையின் பெறுபேறுகள் சங்கத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளரான திரு. இ. சிவானந்தன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

கந்தையா தர்மராசா பிரவேச பண்டித பரீட்சையில் முதற்பிரிவில் சித்திபெய்தியுள்ளார்.

த. கௌரி ப. பங்கஜவதனி சி. ஆனந்தினி ஆகியோர் 2-ம் பிரிவில் சித்திபெய்தியுள்ளனர்

செ. சுதாகரன் யோ. சுலோசினி சி. யசோதரன் சி ஸ்ரீதர சர்மா வி. ஐயந்கலா கே. ஆனந்தி கு. குமுதினி வ. நிர்மலாதேவி ஞா. அலோசியஸ் ஆ தங்கமயில் ஆ பிரமானந்தன் க. நளாயினி ப. சசிபாரதி சு. ரஜினி பா. பாலாம்பிகை திருமதி த. பாமினி சி. தேவகி த. தவராஜன் மு. சுபாசினி ஆகியோர் சாதாரண சித்தி அடைந்துள்ளனர்.

க சாந்தரூபி செ. சுசீலா ந. சத்தியகலா ஆகியோர் நானசித்தியைப் பூரணப் படுத்தியுள்ளனர்.

பரமானந்தம், கலைச்செல்வி, பாலபண்டித பரீட்சையில் 2-ம் பிரிவில் சித்தியெய்தியுள்ளனர்.

## மாவீரர் நினைவாக

# கல்வித் திணைக்களத்தில் இன்று சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு இன்று யாழ் கல்வித் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் ஊழியர்கள் அனைவரும் இணைந்து கல்வித் திணைக்கள வளாகத்தில் முழுநேர சிரமதானம் ஒன்றை மேற்கொள்கின்றனர்

தொடர்ந்து அங்கு 21ஆம் திகதி தமிழீழத் தேசியக் கொடியேற்றலும் 26 ஆம் திகதி இரவு மாவீரர் சுடர் ஏற்றலும் 27 ஆம் திகதி மாலை மாவீரர் சம்பந்தமான கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டு இடம்பெற உள்ளன. இதனைப் போன்ற சகல பாடசாலைகளிலும் மாவீரர் எழுச்சி வாரத்தை அனுஷ்டிக்கும்படி சகல பாடசாலை அதிபர்களையும் யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கிளிங்டனின் ஆவணம் தேடலில் வெள்ளைமாளிகைக்கும்பங்கு?

(வாஷிங்டன்)

புதிய ஜனாதிபதி கிளிங்டனின் பாஸ்போர்ட் பைல்களைத் தேடுவதில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டப்பட்ட தூதரக விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி வெளிநாட்டமைச்சர் டம்போஸி கடந்த வாரம் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

எனினும் இந்த பைல்களை தேடுவதில் வெள்ளைமாளிகை பங்கு வகித்ததாக தெரிவிக்கப் படுகிறது.

வெள்ளை மாளிகையின் பெயரை உபயோகித்து சம்பந்தப்பட்ட பைல்களைத் தேடும்படி காங்கிரஸ் வெளிநாட்டமைச்சு தொடர்பு அதிகாரி ஸ்டீவன்பெரி தம்மைக் கேட்டதாகவும் போஸி தெரிவித்ததாக நியூஸ்வீக் சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது

எனினும் நிர்வாக அதிகாரிகள் டம்போஸின் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளனர்

ஆனாலும் பில் கிளிங்டனுக்கு எதிரான இந்தச் செயலுக்கு அரசாங்கத்தின் உயர் மட்டம் உத்தரவிட்டதா என்ற கேள்வி பாரதூரமாக எழுந்துள்ளது.

அங்கத்தவர்களுக்கு உதவும் பொருட்டு கிளிங்டன் தனது பிரஜா உரிமையை மாற்ற முயன்றாரா என்பதை அவரது பைலிலிருந்து தேடும்படி பெரி தன்னைக் கேட்டதாக டம் போஸி தெரிவித்துள்ளதுடன் வெள்ளை மாளிகை கிளிங்டன் பற்றிய தகவலை தன்னிடம் கோரியிருப்பதாக பெரி தன்னிடம் கூறியதாக டம்போஸி

# ஐ. ஏ. எஸ் அதிகாரியான சந்திரலேகா பதவி துறப்பு

## —அரசியலில் இறங்குவாராம்

(சென்னை)

தமிழக அரசில் உயர் பதவி வகித்து வந்த திருமதி சந்திரலேகா தமது பதவியை உதறித் தள்ளியிருப்பது ஜெயலலிதா அரசுக்கு தலையிடியாக டியை ஏற்படுத்தி வரும் சுப்பிரமணியம் சுவாமியுடன் அவர் அரசியல் தொடர்புகளைக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் அ. இ. அ. தி. மு.

# 19 இலங்கை தமிழ் அகதிகள் வேலூர் சிறையிலிருந்து தப்பினர்

(சென்னை)

வேலூர் மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் பத்தொன்பது பேர் கடந்த திங்களன்று, சிறையிலிருந்து தப்பியிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. எனினும் இவர்களில் ஐந்துபேர் குடியாத்தம் அருகே ஒரு வீடொன்றில் வைத்து தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகவும், அவர்களில் ஒருவர் பொலிசாரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

வேலூரில் பலத்த காவலுக்கு மத்தியில் சிறைவைக்கப்பட்டிருந்த இவர்கள் அண்மையில் வீசிய கடும் புயல் காரணமாக ஏற்பட்ட மின் தடை மற்றும் சாதகமான மான சூழலைப் பயன்படுத்திச் சிறையிலிருந்து தப்பி விட்டதாகவும், இவர்களைக் கைது செய்வதற்காக தனிப்பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டிருப்பதுடன் எல்லா பொலிஸ் நிலையங்களும் உஷார்படுத்தப்பட்டிருப்பதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வங்கக் கடலில் புயல் மையம் தமிழகக் கரையை இன்று கடக்கும்

(சென்னை)

வங்கக் கடலில், அந்தமான் தீவுப் பகுதியில் நேற்று முன் தினம் உருவெடுத்த புயலின் மையமான காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னை ... றும் ஆந்திரப் பிரதேசக் கரையோரங்களின் கரையைக் கடக்கக் கூடும் என்றும் எதிர் பார்க்கப் படுவதாக சென்னை வானிலை அவதானநிலையம் நேற்றுக்காலை அறிவித்தது.

இந்தியாவின் விடுதலைப் போராட்டவரலாற்றில் 'யாலியின் வாலபாக்கில்' படுகொலை புரிந்த பிரிட்டிஷ் தளபதி டயர், பின்னர் பிரிட்டனில் இந்தியன் ஒருவனால் கொல்லப்பட்டமை யுத்தம் மிகவும் தொலைதூரம் செல்லும் என்பதற்கு ஒருஎடுத்துக்காட்டாகவேஇருந்தது. அதேபோன்று யூதர்களைப் படுகொலை செய்த நாசித்தலைவர்களை பின்னர் யூதர்கள் தேடிச் சென்று அழித்தமையும் யுத்தங்கள் காலத்தையும் எல்லையையும் மீறிச் சென்றமைக்கு சிறப்பான எடுத்துக்காட்டுகளாகும்.

இதை ஒத்தநிலையே இன்றைய இலங்கையின் நிலையுமாகும். இலங்கையில் யுத்தம் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் சாதாரண கிராமப்புற இளைஞர்களுக்கும் தமிழருக்கும் இடையிலேயே எனச் சிங்கள அரசியல்வாதிகள் எண்ணியிருந்தார்கள். ஆனால், இன்று காலத்திற்கு காலம் கொழும்பிலும் கேந்திர நிலையங்களிலும் குண்டுகள் வெடிக்கின்றன. இதில், இக்குண்டு வெடிப்புகளை யார் செய்தார்கள்? காரணம் என்ன? அரசு கூறுவதுபோல் புலிகளா? இல்லையா? என்பது வேறு விடயம். ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட யுத்தத்தின் எதிரொலியே இக்குண்டுவெடிப்புகளுக்குக் காரணம் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

அதாவது, இலங்கையில் நடைபெறும் இப்போரின் எல்லை இன்று வடக்கு கிழக்குடன் நின்றுவிடவில்லை இலங்கை பூராவுமே வியாபித்துள்ளது. இதன் தாக்கம் சிறிலங்கா அதிகார பீடத்தின் உயர் மட்டம்வரை பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்பு பற்றிய கேள்வியை இன்று ஏற்படுத்தியுள்ளது. இதே வேளை யுத்தத்தினால் சிறிலங்கா அரசாங்கம் எட்ட முனைந்ததையும் அடையவில்லை.

ஆனால், தமிழருக்கு எதிராகப் போரைத்திணித்த எந்த சிங்கள அரசியல் தலைவர்கள் எவரும் இவ்வாறான சூழ்நிலை ஏதோ ஒரு வழியில் தானும் உருவாகும் என எண்ணியிருக்க நியாயமில்லை. போரைத்திணிப்பவர்கள்போரின் தாக்கத்தை தமது இழப்புகளின்போதேசந்திக்கின்றனர். அப்பொழுதே போரின் கொடுமை பற்றிச் சிந்திக்கின்றனர். ஆனால், அப்பொழுது போர் அவர்களின் கையை மீறியதாக அவர்களினால் கட்டுப்படுத்த முடியாததாகப் போய்விடுகின்றது. இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மேலே குறிப்பிட்டுள்ள சிந்தனை உருவாகியுள்ளமைக்கும் இதுவே காரணமாகும்.

---

றித் தள்ளியிருப்பது ஜெயலலிதா அரசுக்கு தலையிடியாக உருவெடுத்திருப்பதாக சென்னையிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ஐ ஏ. எஸ். அதிகாரியான சந்திரலேகா அரசுப்பதவியை உதறிவிட்டு அரசியலில் இறங்கியிருப்பதாகவும், ஜெயலலிதா அரசுக்குத் தலையிவும் கூறப்படுகிறது.

மேலும் அ. இ. அ. தி. மு. க. எம் எல், ஏக்கள் பலரும் சுவாமியின் வலையில் சிக்கிக் கொள்ள இருப்பதாகவும், ஜெயலலிதாவுக்கு தர்ம சங்கடம் ஏற்படும் வகையில் சுப்பிரமணியம் சுவாமியின் செயல்கள் அமைந்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## கேரள, புதுவை, தமிழக மாநிலங்களில் பாதிப்புஅதிகம்

### மத்திய அமைச்சர் ஜாக்கர்

(டில்லி)

தென் மாநிலங்களில் வீசிய கடும் புயல் மழை என்பவற்றின் காரணமாக தமிழ்நாடு, புதுவை, கேரள மாநிலங்களில் நிலைமை இப்போது மிக மோசமானதாக இருப்பதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் பல்ராம் ஜாக்கர் கூறியுள்ளார்.

தென் மாநிலங்களை நேரில் சுற்றிப்பார்த்த அவர் புதுடில்லி திரும்புவதற்கு முன்பாக திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அத்துடன் இம் மாநிலங்களில் தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மத்திய அரசு உதவி அளிக்கும் எனவும், தமது அறிக்கையை புதுடில்லியில் பிரதமரிடம் கையளிக்க இருப்பதாகவும் அவர்மேலும் குறிப்பிட்டார்.

## ஈராக்கிற்கு ஆயுதவிற்பனை

### ஜோன் மேயர் மீது குற்றச்சாட்டு

(லண்டன்)

1989இல் ஈராக்கிற்கு ஆயுத விற்பனை செய்ததாகப் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயர் மீது எதிர்க்கட்சியான தொழிற்கட்சி சுமத்திய குற்றச்சாட்டை ஜோன் மேயர் மறுத்துள்ளார்.

பிரதமர் ஜோன் மேயர் 1989 இல் வெளிநாட்டமைச்சராக இருந்த வேளையில் இந்த ஆயுத விற்பனை இடம்பெற்றதாக இரகசிய தஸ்தாவேஜுக்கள் மூலம் தெரிய வந்திருப்பதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். பிரிட்டன் ஆயுதத் தடையை மீறிச் செயற்பட்டிருப்பதாகத் தொழிற்கட்சியினரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு கன்சர் வேட்டிவ் அரசாங்கத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

---

## தலைமை நீதிபதி நியமனம்

(டில்லி)

இந்தியாவின் புதிய தலைமை நீதிபதியாக லலித் மோகன் சர்மா நேற்றுக்காலை பதவி யேற்றார். இந்தியக் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த எளிய நிகழ்ச்சி ஒன்றில் அவர் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டார். இவ் வைபவத்தில் குடியரசு துணைத்தலைவர் கே. ஆர். நாராயணன், பிரதமர் நரசிம்மராவ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

கோரியிருப்பதாக பெரி தன்னிடம் கூறியதாக டம்போஸி தெரிவித்தார்.

இதேவேளை காங்கிரஸ் அங்கத்தவர்களின் கோரிக்கையையே டம்போஸிடம் தெரிவித்ததாகவும் வெள்ளைமாளிகையின் பெயரை உபயோகிக்கவில்லை எனவும் பெரிமறுப்புத் தெரிவித்துள்ளார்.

மையமான காற்றழுத்த தாழ்வு மண்டலம், சென்னைக்கு கிழக்கு தென்கிழக்கே 1500 கிலோ மீற்றர் தொலைவில் நேற்று மையம் கொண்டிருந்ததாகவும், அது மேற்காக வடமேற்காக நகர்ந்து மேலும் தீவிரமடைந்து இன்று பிற்பகலில் தமிழ்நாடு மற்

வானிலை அவதானநிலையம் நேற்றுக்காலை அறிவித்தது.

இதே வேளை அரபுக் கடலில் உருவான மற்றொரு காற்றழுத்தமண்டலம் நேற்று முன்தினம் பிற்பகலில் கர்நாடக மாநிலக் கரையைக் கடந்துள்ளது.

## பாலஸ்தீனியர் கட்டுப்பாட்டின் கீழ் அரபுப்பிரதேசங்கள் இருக்கலாம்

### இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர்

(செய்ரோ)

அராபியர்கள் வாழும் சகல பிரதேசமும் பாலஸ்தீனியர்களின் கட்டுப் பாட்டிலேயே இருக்கும் என இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் ஷிமோன் பெரஸ் தெரிவித்துள்ளார்.

''இருபத்தைந்து ஆண்டுகால இஸ்ரேலிய இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்த பாலஸ்தீன மக்களுக்கு இது,ஒரு முக்கிய விடயமாகவே கருதப்படுகிறது.

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை விலக்கும் முயற்சியில் எகிப்து ஈடுபடும் பொருட்டு ஷிமோன் பெரஸ் கெய்ரோவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்;

கெய்ரோவில் அவர் உரையாற்றும் போது ஐந்தாண்டு இடைக்கால சுயாட்சிக்காலம் இறுதியில் சுதந்திரத்துக்கு வழி செய்ய வேண்டுமெனவும் மேற்கு கரையில் இருந்தும் காஸா எல்லைக் கோட்டில் இருந்தும் இஸ்ரேலிய துருப்புக்கள் வாபஸ் பெறுவது போன்ற பிரச்சினைகளுக்கு உத்தரவாதம் அளித்து தங்கள் சொந்தப் பகுதியை தாங்கள் கட்டுப்படுத்த உறுதியளிக்க வேண்டும் என பாலஸ்தீனியர்கள் கோரியுள்ளனர்.

இந்நிலையில் அராபியரின் பிரதேசம் பாலஸ்தீனியரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் அவர்களின் பிரதேசப் பிரச்சினையை நாம் விலக்கி வைக்கவில்லை எனவும் பெரஸ் தெரிவித்தார்.

இடைக்கால சுயாட்சிக்குப் பின் இறுதி சமாதான ஒப்பந்தத்தில் ஜோர்டான் - பாலஸ்தீனசம்மேளனம்ஒன்றுபற்றியும் ஜோர்டான் பாலஸ்தீனம் -இஸ்ரேலியசம்மேளனம்பற்றியும் குறிப்பிட்டு உரை நிகழ்த்தினார்.

## தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம்

### பா. ம. க. தொண்டர்கள் கைது

(சென்னை)

எரிபொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து தமிழ்நாட்டில் மத்திய அரசு அலுவலகங்களுக்கு எதிரே பாட்டாளிமக்கள் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். கடந்த ஞாயிறு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து இக் கட்சியின் தொண்டர்கள் சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேர் வரையில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனராயினும் பின்னர் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

## கிளிங்டன் சவால்களை எதிர்கொள்ளத் தயார்

### - சாம் நண்

வெளிவிவகார கொள்கைகள் தொடர்பாக சவால்களை எதிர்நோக்க இருக்கும் கிளிங்டன் நிர்வாகம் கடந்தகால சரித்திரங்களினூடாக பாடங்களை கற்றுக்கொள்ளும் எனவும், ஜனநாயகமயமாக்கப்பட்ட ரஷ்யாவிற்கு உதவுவதற்கு முன்னுரிமை காட்டப்படமாட்டாது எனவும் செனட்டர் சாம் நண் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ரஷ்யாவின் பொரிஸ் யெல்ட்சின் அரசாங்கம் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிபிருப்பதாகவும், மேற்குலகம் இந்நிலைமைகள் தொடர்பாக உன்னிப்பான கவனம் கொண்டிருப்பதாகவும்குறிப்பிட்டார்

ஈழநாதம்

## மாவீரர் எழுச்சிவார கரகாட்ட நிகழ்வு

மாவீரர் வாரத்தை எழுச்சியூட்டும் வகையில் யாழ்.மாவட்டம் எங்கும் எழுச்சிக்கரகம் என்னும் தெருக்கூத்து நடாத்தப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட கலைபண்பாட்டுக்கழகத்தினரால் தயாரித்தளிக்கப்படும் இந்தக் கரகாட்டத் தெருக்கூத்து இரவு வேளைகளில் பிரதான சந்திகள் தோறும் நடாத்தப்பட்டு வருகின்றது.

## வேலணை கல்விக்கோட்ட மாவீரர் எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக்கோட்டம் நடாத்தும் ''மாவீரர் எழுச்சிவிழா'' இன்றுபிற்பகல் 2 மணிக்கு யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் வேலணை கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இயற்றமிழ் நிகழ்வுகள் ''செல்வம்'' அரங்கில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சோ, தங்கன் அவர்களும், சிறப்பு விருந்தினராக தீவகத் தளபதி த. வில்லவன் அவர்களும் கலந்துகொள்கின்றனர்.

இசை, நாடக, தமிழ் நிகழ்வுகள் ''வானதி'' அரங்கில் நடைபெறவுள்ளன, இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சி.சேரலாதன் அவர்களும், சிறப்பு விருந்தினராகத் தீவக உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சி. செம்மணன் அவர்களும் கலந்து கொள்ளுகின்றனர்.

## விக்னா பாலர் பாடசாலை

கடந்த 20 - 11 - 90 அன்று ஆனையிறவுச் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை விக்னா அவர்களின் நினைவாக நாளை 20-11-92) அல்லாரை தெற்கில் புதிதாக அமைக்கப்பெற்ற விக்னா பாலர் பாடசாலையை விடுதலைப் புலிகள் சமூக மேம்பாட்டுப் பிரிவினரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

## மருத்துவபீட மாணவர் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் பகிஷ்கரிப்பு நேற்றுக் கைவிடப்பட்டதாக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

மருத்துவபீட மாணவர் ஒருவர் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் எதுவித காரணமுமின்றி இடை நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து நேற்று முதல் தொடர்ச்சியாகப் பல்கலைக்கழக விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதென ஏற்கனவே தீர்மானித்ததுடன் நேற்று முதல் அவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதாக அறிவித்திருந்ததும் தெரிந்ததே.

மேற்படி இடை நிறுத்தி வைக்கப்பட்ட மருத்துவபீட மாணவன்தொடர்பான பிரச்சினை உரியவர்களால் சுமுகமான முறையில் தீர்த்துவைக்கப்பட்டதை அடுத்து மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்.

## நிவாரண பொருள்களை வழங்கத் தவறின் யாழ். செயலகத்துக்கு எதிராக வெகுஜனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களுக்கு தேவையான அளவு நிவாரணப் பொருள்களையும். அத்தியாவசியப் பொருள்களையும் வழங்க யாழ், செயலகம் தவறும் பட்சத்தில் அடுத்த மாத முற்பகுதியில் வெகுஜனப் போராட்டம் நடாத்தப்படும் என யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

உணவுப் பொருள்களின் கையிருப்பு போதிய அளவு இல்லாது இருப்பதினால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகிக்கமுடியாதிருக்கின்றது என யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்திருப்பது தொடர்பாக ப.நோ.கூ. சங்க தலைவர்கள், பொது முகாமையாளர் மாநாட்டில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உணவுப் பொருள்கள் கையிருப்பு போதிய அளவு இல்லாததினால் விநியோகிக்க முடியாது என்று தெரியப்படுத்தி விட்டு, வர்த்தக திணைக்களக் கிளைகள் ஊடாக இப்பொருள்கள் தாராளமாக வழங்கப்படுவது செயலகத்தினால் மேற்கொள்ளப்படும் தவறான நடவடிக்கை என்றும்,

உணவு நிலை சீராகும்வரை செயலகத்தில் உள்ள உணவுப் பொருள்கள் தனியாருக்கோ வர்த்த திணைக்களத்துக்கோ, வழங்காது ப.நோ கூ. சங்கங்களின் ஊடாகப் பங்கீட்டு அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவு சபையின் செயலாளர் க. சிவசுப்பிரமணியத்தால் யாழ். அரச அதிபருக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30-11-92க்கு முன் சாதகமான பதில் கிடைக்காவிடில் மார்கழி மாத முற்பகுதியில் வெகுஜனப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு சமாதான தீர்வு

### மதத்தலைவர், அறிவுஜீவிகள் கோரிக்கை

[கொழும்பு]

கொழும்பில் மதத் தலைவர்கள் மற்றும் அறிவு ஜீவிகள் சிலர் சேர்ந்து இலங்கையின் இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு கோரி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆளும்கட்சியினரும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் ஒன்றுசேர்ந்து வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று கோரியுள்ளனர். அரசும் போராளிகளும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சமாதான உடன்படிக்கைக்குவரக்கூடியதீர்வுத் திட்டமொன்றுதம்மிடமிருப்பதாக அவர்கள் கூறியுள்ளார்கள்.

இலங்கையை எதிர்நோக்கியுள்ள அவசரமான இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி வற்புறுத்தும் இந்த சமாதானத் திட்டத்தில் பௌத்த மதத்தவர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள், மருத்துவர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பலர் கைச்சாத்திட்டுள்ளனர்.

தீர்வை எட்டும் நோக்குடன் வடக்கு - கிழக்குப் பிரச்சினையில் புலிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவரும் கலந்துகொள்ளக்கூடிய ஒன்பது அம்சங்களை இந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது

தாம் முன்வைத்துள்ள திட்டம் சம்பந்தமான ஆரம்ப பேச்சுவார்த்தைகளின் போது வெளியார் சமரசம் தேவைப்படக் கூடும் என்பதையும் இக்குழு ஒப்புக்கொள்கிறது. இலங்கையின் இறைமையும், கௌரவமும் நிலைநிறுத்தப்படுமானால் வெளியார் அமைப்புகள் உதவிசெய்ய முடியும் என்று இக்குழு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக சிக்கல்படுத்திய படியால் தான் தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தும்

தொடர்ந்து அவர்கள் கருத்துக்கூறுகையில்:

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ஏற்படுத்தப்பட்டு, அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் (DEVOLUTION of POWER) ஒரு சுயாட்சி அலகை (AUTONOMOUS UNIT) உருவாக்கி சமாதானத் தீர்வை ஏற்படுத்த முயல்கிறோம் என்றும், தெரிவித்தனர்.

பல மைல்கள்

கந்துலவை

எனும் நிகழ்ச்சியை இவர் குடும்பத்தினருடன் சென்று பார்வையிட்டார்,

குண்டுத் தாக்குதல் நடைபெற்ற அன்று காலை 6 மணிக்கு காலிமுகத்திடலில் உடற்பயிற்சியில் ஈடுபட்டார். பின்னர் வீடு திரும்பி அவசர அவசரமாக அலுவலகம் செல்லப் புறப்பட்டார்.

காலை 8.05 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்ட இவர் பௌத்தலோகமாவத்தை ஊடாகக் காலி வீதிக்குவந்து அவ்வீதியூடாக அலுவலகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யில் இருந்து மோட்டார் சைக்கிள் நபரொருவர் இவ் வாகன அணியைத் தொடர்ந்து வந்ததை அவதானிக்க முடிந்தது காலிவீதிக்கு வந்ததும் இந் நபர் பல தடவை கடற்படைத் தளபதியின் வாகனத்தை முந்திச் செல்ல முயன்றார் ஆனால் போக்குவரத்து நெருக்கடியினால் அது சாத்தியப்படவில்லை.

இவ் வாகனங்கள் கொள்ளுப்பிட்டியில் வந்துகொண்டிருந்த போது வேறொரு மோட்டார் சைக்கிளும் பின்தொடர்வது அவதானிக்கப்பட்டது. ஆனால் இம்மோட்டார் சைக்கிள் கோல்பேஸ் விடுதிக்கு அண்மையில் திரும்பி மலே வீதிப் பக்கமாகச் சென்று விட்டது.

தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு 75 யார் தூரத்தில் வந்து கொண்டிருக்கும் போது பின்னால் கஜபாகு ரெஜிமென்ட்டைச் சேர்ந்த மேஜர் செனவியின் வாகனம் வந்து

## பரீட்சை

யாழ்ப்பாணம் எடுத்துவர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இது சம்பந்தமாக வானொலித் செய்தி ஒன்றை பரீட்சை ஆணையாளருக்கு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் அனுப்பிவைத்துள்ளார். மேலும் அச்செய்தியில் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் க பொ. த (சா/த) பரீட்சைக்கான ஒழுங்குகளை மேற்கொள்ள தான் கொழும்பு வருவதாகவும் அதற்கான பிரயான ஒழுங்குகளை செய்து தரும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார். (பா

செல்வதற்காக முயன்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட மோட்டார் சைக்கிள் நபர் கடற்படை அதிகாரியின் வாகனத்திற்கு அருகில் சென்றுவிட்டார் அப்போது காலை 8.35 மணி பாதையின் அகலம் 15 அடியாக இருந்தமையால் குறுகிய இடைவெளியினூடாக மோட்டார் சைக்கிள் நபர் செல்ல வேண்டியிருந்தது.

இதனால் அந்நபர் கடற்படைத் தளபதியின் வாகனத்திற்கு மிக நெருக்கமாகவே சென்றுவிட்டார்.

சில அடிகள் சென்றதும் அவர் எடுத்துச்சென்ற குண்டு வாகனத்துடன் மோதி வெடிக்கவைக்கப்பட்டது. இதனால் கடற்படைத் தளபதி சென்ற வாகனம் சிதறியது. சற்றுப் பின் வாங்கிவிட்ட லொறி சேதமடைந்தது.

## முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்ட ரீதியாக உள்ள இறைச்சிக்கடை உரிமையாளர்கள் அனைவரையும் 20-11-92 வெள்ளிக்கிழமை முற்பகல் 9 00 மணியளவில் சின்னக்கடை வடக்கு இல. 09, சமாச காரியாலயத்தில் நடைபெறும் பொதுச் சபைக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தரும்படி வேண்டுகின்றேன்.

நன்றி

க. சி. கிருஷ்ணன்
செயலாளர்
யாழ்/ மாவட்ட இறைச்சிக்கடை
உரிமையாளர்கள் சமாசம் (சி-5425)

## சகல தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் ஓர் அறிவித்தல்

மாவீரர் தினத்தை புனிதமாகவும், சிறப்பாகவும் கொண்டாடும் பொருட்டு சகல கல்வி நிறுவனங்களும், யாழ்ப்பாணம், மருதனார்மடம், பண்டத்தரிப்பு கோட்டங்கள் கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ். மாவட்ட மாவீரர் பணியகத்திலும், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய கோட்டங்கள் அந்தந்த கோட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் பணியகத்திலும் சென்று மாவீரர் கையேடையும், தேசியக் கொடியையும் பெற்று மாவீரர் கையேட்டின் பணிப்புரைப்படி நடாத்துமாறு வேண்டுகின்றோம்.

பொதுச் செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ் மாவட்டம்
(3666)

## நீங்காதநினைவில் ஆண்டு2

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## லூயிஸ் மேரிமெக்டலின் (மலர்)

மண்ணில்: 13-06-1946

விண்ணில்: 19-11-199ᴗ

" ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள் "

சிரித்துச் சிரித்து கதைகள் சொல்லி
எங்கள் செல்லக் குழந்தையாய் நீயிருந்தாய்
கள்ளமில்லா மழலையின் சிரிப்பும்
கை தட்டும் அழகும் — எங்கள்
மனதைவிட்டு அகல தம்மா.
மலர்ந்த மலராகவே — நீ
இறைவன் பாதம் சேர்ந்து விட்டாய்.


இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று 19-11-92 வியாழக்கிழமைகாலை 6.30 மணிக்குப் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும், 6.15மணிக்கு மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்திலும் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் வருந்தும்

கணவன், பிள்ளைகள், மருமகன்,
சில்லாலை, ஐயா, அம்மா, சகோதரர்கள்,
பண்டத்தரிப்பு. உற்றார், உறவினர்.

(சி- 5424)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## திருமதி முருகேசு பாக்கியம் அவர்கள்

மலர்வு: 28.01.1942

உதிர்வு: 06.1ᴗ.1992

கன்றழுத குரலுக்கு கனிந்துவரும் தாயம்மா
விண்முழுதும் ஒளியான முழுநிலவு நீயம்மா
இன்றழுது துடிக்கும் இதயமெல்லாம் தீயம்மா
என்றென்றும் வாழ்வாய் இறைவனிடம் போயம்மா

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்,

க. முருகேசு (கணவன்) (பட்டயக் கணக்காளர் ICMA)
பிள்ளைகள்: திருமதி ரா. சந்திரா, திருமதி இ. இந்திரா, திரு. மு. குகனேசன் (சுவீஸ்), கா. ராமஜெயம் (மருமகன்) (ஆசிரியர்: நெல்லியடி ம.ம. வி) ஆ. இராமநாதன் (மருமகன், (ஆசிரியர்: உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

[3662]

திய படியால் தான் தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்பட்டது என்று அவர்கள் தெரிவித்தார்

### ஆயுதப்

உள்ள நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் சிறிலங்கா தீவிரமாக உள்ளது. இதன் ஒரு கட்ட நடவடிக்கையாக பிரான்சிடமிருந்து கடற்படைக்கு அதிவேக நவீன படகுகளையும், விமானங்கள் போன்றவற்றையும் பிரிட்டனிடம் இருந்து கவச வாகனங்களையும், பீரங்கிகளையும் கொள்வனவு செய்வதில் சிறிலங்கா கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது.

### சின்னஞ் சிறு

மாவீரர் இவர்களின்கனவினை நினைவினை வாழ்வினை இன்று அனைவரும் மனதிலே கொள்வோம்.

உரிமைக்காக நாட்டிற்காக எங்களுக்காக உங்களுக்காக எழுந்துவந்த வீரர் இவரை மறந்து போவதா?

கடலின் கரையில் மோதும் அலைகள் சலிப்பதில்லை. உயிரை இழக்க/இழந்தும் எங்கள் வீரர் தளர்ந்ததில்லை. மீண்டும் உணர்வு கொண்டு எழுந்துவர - மறந்ததில்லை. இன்று இவர்கள் எங்களுடன் இந்த மண்ணில் இந்தக் காற்றில் இந்த அலையில் கலந்து வாழுகின்றனர். ஒரு சிவந்த விடியலில் ஒளியாயும் இவரே வருவார.

மாவீரர்கள் சாவிலும் வாழ்கின்றனர்.

நாளை இங்கு நிச்சயமாய்
ஈழம் வந்து பிறக்கும்
வேழம் வென்ற வேங்கைக் கொடி
எங்கும் இங்கே பறக்கும்

மென்ட்டைச் சேர்ந்த மேஜர் சென்பீயின் வாகனம் வநது கொண்டிருந்தது.

அதற்கு வழிவிட்டுக்கொடுப்பதற்காக இவ் வாகன அணியின் வேகம் குறைக்கப்பட்டது அதேவேளை முன்னால்சென்ற லொறி ஒன்றையும் முந்திச் சற்றுப் பின் வாங்கிவிட்ட லொறி சேதமடைந்தது.

இதேவேளை இக் குண்டு வெடிப்பில்கொல்லப்பட்டவர்களின் உடலில் சுமார் 200க்கு மேற்பட்ட உலோகச் சிதறல்கள் காணப்பட்டதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 18-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6735

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
22-6922, 26-691, 41-4176, 26-4429, 26-6933, 24-3262, 24-1259, 24-9744, 42-1325, 27-9105, 36-7891.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:
24-6053, 24-8484, 42-9326, 41-6784 28-1730, 24-2496, 27-6024, 40-630, 27-3017, 41-9355, 41-4475, 24-8558, 41-7273, 28-1706. 24-5955, 24-1250, 27-5907, 24-5967, 26-6026, 42-0962, 28-6020.

NEW SCIENCE ACADEMY
JAFFNA
94 A/L
ZOOLOGY
BY MR. தம்பிராஜா BSc

புதிய பிரிவு ஆரம்பம்
21-11-92- சனிக்கிழமை 7.00 மணி
(சி-5419)

## வனமே வனமே நிலைகொள்வாய்
## மனமாய் மழைக்கு மருந்தாவாய்